## சுருக்கம்

தமிழ் நாடு அரசு அலுவல் விதிகள், 1978 – சிறு தொழில் துறையின் பெயரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை என பெயர் மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்பட்டது – தமிழ் நாடு அரசு அலுவல் விதிகள் முதலாம் அட்டவணைக்கு திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

### பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்திருத்தத் (எ) துறை

அரசு ஆணை (நிலை) எண்.165

நாள்:01.09.2008.
ஆவணி 16,
திருவள்ளுவராண்டு 2039.
படிக்கப்பட்டது:

அரசு ஆணை(நிலை) எண்.9, சிறு தொழில் துறை, நாள் 22.02.2008.

*****

ஆணை:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக் கூறு 166–ன் உட்கூறு (2) மற்றும் (3)–ல் அளிக்கப்பெற்ற அதிகாரங்களின் படி, தமிழ்நாடு ஆளுநர் இதன் மூலம் கீழ்க்கண்டவாறு திருத்தத்தை 1978 – ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அலுவல் விதிகளுக்கு அமைக்கின்றார்:–

### திருத்தம்

மேலே கூறப்பட்ட விதிகளின் முதலாம் அட்டவணையில்

(i) "சிறு தொழில் துறை" என்ற தலைப்பிற்குப் பதிலாக "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை" என்ற தலைப்பு மாற்றீடு செய்யப்படுகிறது.

(ii) "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை" என்று மாற்றீடு செய்யப்பட்ட தலைப்பின் கீழ் "சிறு தொழில் துறை" "சிறு தொழில்கள்" என்ற பதங்கள் எங்கெங்கு வருகின்றதோ அங்கெல்லாம் "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் " என்று மாற்றீடு செய்யப்படுகிறது.

(iii) "தொழில் துறை" என்ற தலைப்பின் கீழ் "மாநில அரசின் அதிகாரப் பட்டியலுக்குரிய பொருட்கள்" என்ற துணைத் தலைப்பின் கீழ் உள்ள "மற்றும் நடுத்தர" என்ற சொற்றொடர் எங்கெங்கு வருகிறதோ அங்கெங்கெல்லாம் அது நீக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குத்சியா காந்தி
முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து செயலாளர்கள்,சென்னை–9.
செயலாளர், குறு,சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை–9.
செயலாளர்,தொழில் துறை, சென்னை–9.
அனைத்து தலைமைச் செயல்கத் துறைகள், சென்னை–9.

நகல்
ஆளுநரின் செயலாளர், சென்னை – 22.
முதலமைச்சரின் செயலாளர்கள், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 9.

இ.கோ.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//